# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 8, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஜனவரி 22, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

> *“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்*
> *கிறையென்று வைக்கப் படும்.”*

*நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

### 1. இரங்கற் குறிப்பு

#### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திருமதி கவிநிலவு தர்மராஜ் அவர்கள் 11–12–2006 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ் அவர்கள் மொடக்குறிச்சி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1991 முதல் 1996 வரை சிறப்பான முறையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மறைந்த உறுப்பினருக்கு மரியாதை செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*